செ.வெ.எண் - 54 நாள்-15.02.2020

# அரியலூர் மாவட்டத்தில் பெண்குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு விழாவில் பாராட்டுச் சான்றிதழ்களை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இரண்டு பெண்குழந்தை பெற்று குடும்ப கட்டுபாடு செய்த தாய்மார்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண் கல்வியை ஊக்கப்படுத்தவும், பெண்கள் வாழ்வில் ஒளியேற்றவும் திருமாங்கல்யத்திற்கு நிதியுதவிடன் 8 கிராம் தங்கம் வழங்கும் திட்டத்தினை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். பெண் கல்வியை ஊக்கப்படுத்தவும், பெண்கள் பாதுகாப்பிலும் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

தொட்டில் குழந்தை திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல் முதலாக கொண்டு வந்து இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் பெண்களின் வாழ்வாதாரம் உயர்வடைந்துள்ளது. பெண்களின் நலனுக்காக இந்த அரசு பல்வேறு சிறப்பு அம்சங்களை செயல்படுத்தி வருகிறது.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் சுட்டிக்காட்டப்பட்ட நிலவரத்தைத் தொடர்ந்து, பெண் குழந்தைகளின் எண்ணிக்கையினை அதிகரிக்க, மத்திய அரசு நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களிலிருந்தும், பெண் குழந்தைகளின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வரும் 100 மாவட்டங்களை தேர்ந்தெடுத்து பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளை கற்பிப்போம் என்ற புதிய திட்டத்தினை அறிவித்தது. 2014-15ஆம் ஆண்டில் ரூ.100 கோடி செலவில் மத்திய அரசு துவக்கியது. இத்திட்டம் மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

சுகாதாரத்துறை, மனிதவள மேம்பாட்டுத்துறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகங்களின் கூட்டு முயற்சியில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் நடைமுறைபடுத்தப்பட்டு வரும் சட்டங்களையும், நலத்திட்டங்களையும் குறித்த விழிப்புணர்வை பரவலாக்கி, பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை உயர்த்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டங்களின் நோக்கம் பாலினபாகுபாடு அடிப்படையில் குழந்தைகளின் பாலினம் அறிந்து கொள்ளப்படுவதை தடுத்தல், பெண் குழந்தைகள் உயிர் வாழ்வதையும், அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல், பெண் குழந்தைகளின் கல்வியினை மேம்படுத்துதல், குடும்ப கட்டுப்பாட்டை ஊக்குவித்தல் போன்றவையாகும்.

நமது மாவட்டத்தில் 2019-20ஆம் ஆண்டின் பெண் குழந்தைகள் பிறப்பு எண்ணிக்கை 4495 ஆகும். 2019-20 ஆம் ஆண்டின் 2 பெண் குழந்தைகளின் பிறப்பு எண்ணிக்கை 2298 ஆகும். மேலும், அரியலூர் மாவட்டத்தில் 2018-19ஆம் ஆண்டில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 917 பெண் குழந்தைகள் என விகிதாசாரம் இருந்தது, 2019-20ஆம் ஆண்டில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 961 பெண் குழந்தைகள் ஆக உள்ளது.

இன்று (15.02.2020) நடைபெறும் இவ்விழாவில் 265 இரண்டு பெண்குழந்தைகள் பெற்று குடும்ப கட்டுபாடு செய்துள்ள தாய்மார்களுக்கு சான்றிதழ்களும், ஊக்க பரிசுகளும் வழங்கப்படுகிறது.

பெண் குழந்தைகளின் தன்னம்பிக்கையை அதிகப்படுத்தவும் அவர்களை ஊக்குவிக்கபடுகிற விதமாகவும் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசுகளும் வழங்கப்படுகிறது. மேலும் சுகாதாரத்துறை, செய்தி மக்கள் தொடர்புத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் சமூக நலத்துறை ஆகிய துறைகள் மூலம் பெண் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன என **மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் பொ.சந்திரசேகர், ஒன்றியக்குழுத்தலைவர் பு.செந்தமிழ்செல்வி, ஒன்றிய வார்டு உறுப்பினர் பாலசுப்பிரமணியன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, மாவட்ட சமூக நல அலுவலர் அன்புகுளோரியா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் சாவித்திரி, வட்டார மருத்துவ அலுவலர் எம்.அனிதா மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**